# குழந்தைப் பாடல்கள்



த. துரைசிங்கம்

# முக்கிய அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேச சபை
## பொது நூலகம்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கிறுதல், வெட்டுதல் கிழித்தல் அழித்தல் அழுக்குப்படியவிடல், எழுதுதல், கீறிடுதல் பக்கங்களை மடித்தல்மற்றும் ஊறுபாடுகளைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் போது இத்தகைய குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளரிற்கு உடன் தெரிவிக்கவும் அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப் படுவதுடன் ஊறுபாடுகளிற்கு நூலகப் பொறுப் பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தையும் நீங்கள் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

குறிப்பிட்ட நாளுக்குப் பிந்தும் ஒவ்வொரு நாளிற்கும் 50 சத வீதம் குற்றப் பணம் அற விடப்படும் பொது நூலகத்தின் சிறப்பான சேவைக்காகவும், வாசகர்களின் நலனிற்காக வும் தங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசிய மாகத் தேவைப்படுகின்றது.

விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை

1057

# குழந்தைப் பாடல்கள்

த. துரைசிங்கம் *B. A. (Hons), Dip - in - Ed.*
(கல்வியதிகாரி)

வெளியீடு :
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு : வைகாசி, 1989.

(C) உரிமை : நூலாசிரியருக்கு.

வெளியீடு :


ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு :

ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, B, A, தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10–00

1057



# முருகன் கோயில் கோபுரம்

ஐந்து அடுக்குக் கோபுரம்
அழகு மிக்க கோபுரம்
எங்கள் ஊருக் கோயிலில்
எழுந்து நிற்கும் கோபுரம்

முருகன் கோயில் வாயிலின்
முன்னே நிற்கும் கோபுரம்
அருகில் நின்று பார்க்கவே
ஆகா யத்தைத் தொட்டிடும்

வேலை ஏந்தும் முருகனாய்
விளங்கும் இந்தக் கோபுரம்
காலை மாலை வேளையில்
கண்டு நாங்கள் வணங்குவோம்.

# எங்கள் கண்ணன்



கண்ணன் எங்கள் கண்ணன் – அவன்
கார் மேக வண்ணன்
வெண்ணெய் திருடி உண்டான் - அவன்
வெற்றி பல பெற்றான்

குழல் ஊதும் கண்ணன் - அவன்
குழந்தை களின் நண்பன்
குறும்பு பல செய்தான் - அவன்
கோபி யரின் தோழன்

தர்மம் தழைக்க உதவுவான் - அவன்
தரணி வாழ அருளுவான்
கண்ணன் அவனை வணங்குவோம்—என்றும்
கவலை யின்றி வாழுவோம்.



# பாப்பாவுக்கு

பாப்பா உனக்குச் சொல்வதைக் கேள்
பக்குவமாய் நீ பள்ளிக்குப் போ
எப்போதும் கல்வி கற்றிடுவாய்
ஏற்ற அறிவு பெற்றிடுவாய்

கற்றவன் உலகில் பெரியவனே
கற்றார் மதிப்புக் குரியவரே
பெற்றார் பெரியோர் போற்றுவரே
பெருமைக் குரியவன் நீதானே.

நன்றாய்ப் படிப்பாய் நல்லதையே
நாளும் அதன்படி நடப்பாயே
சென்ற இடமெல்லாம் சிறப்புனக்கு
செல்வர்க்கு மில்லையே உன்மதிப்பு.

# எங்கள் வீடு



நல்ல வீடு எங்கள் வீடு
நாங்கள் வாழும் பெரிய வீடு
கல்லும் மணலும் சாந்தும் கொண்டு
கட்டிய எங்கள் கல் வீடு.

தென்றற் காற்று மெல்ல வீசும்
தேகம் வெயிலில் வாடாது.
கொட்டும் மழையும் பனியும் குளிரும்
நுழையா எங்கள் கல்வீடு.

# அம்மா



அம்மா எந்தன் அம்மாவாம்
அன்பு காட்டும் அம்மாவாம்
சும்மா என்னைக் கொஞ்சியே
தூக்கி அணைக்கும் அம்மாவாம்

இனிய உணவு தந்திடுவார்
என்னைத் தூக்கி மடியினிலே
இனிய பாட்டுப் பாடியம்மா
என்றும் உறங்க வைத்திடுவார்.

நோயும் நொடியும் வந்தாலே
நொந்து மருந்து உண்டிடுவாள்
வாயும் வயிறு கட்டியவள்
வளர்ப்பாள் என்னை அன்பாக,

பட்டுக் கட்டித் தலைசீவி
பாலும் சோறும் தந்துபின்
பொட்டும் இட்டுப் பள்ளிக்கு
போய்வா என்றே விட்டிடுவாள்.

# அப்பா



அப்பா மிகவும் நல்லவர்
அன்பாய் என்னை அணைப்பவர்
எப்போ தவரும் என்னிடம்
இனிமை யாகப் பேசுவார்.

தப்பு ஏதும் செய்தாலும்
தண் டிக்க மாட்டாரே
அப்போ தெனக்குப் புத்தி சொல்லி
அன்பால் என்னைத் திருத்துவார்

கொப்பி புத்தகம் பென்சில்
கொண்டு வந்து தருவார்
அப்பி யாசப் புத்தகத்தில்
அழகாய் எழுதிப் பழகுவேன்.

1057



# அப்பா வருவார்



குப் குப் என்று றெயில் வண்டி
கொழும்பில் இருந்து வருகுது
அப்பா அதிலே வருவாரே
அழகிய பொம்மை தருவாரே

தண்டவாளம் இல்லாமல்
தரையில் ஒடும் றெயில்வண்டி
கொண்டாபோல் மோட்டார் சைக்கிள்
கொண்டு வந்தார் அப்பாவே.

மோட்டார் வண்டி கொண்டு வந்தார்
முன்னும் பின்னும் ஒடுமது
போட்டஇடத்தில் சிலவேளை
போகா ததுவும் கிடந்துவிடும்.

ஏறி நாங்கள் விளையாட
ஏலா திந்தப் பொம்மையெல்லாம்
ஏறி எங்கள் கைகளில்
என்றும் ஆடும் பொம்மையெல்லாம்.

# எங்கள் பாட்டி




எங்கள் பாட்டி நல்லவர்
எம்மேல் அன்பு கொண்டவர்
சின்னக் கதைகள் சொல்லுவார்.
சிரித்து மகிழச் சொல்லுவார்.

நாட்டு வீரர் கதைகளை
நன்று யெமக்குச் சொல்லுவார்
பாட்டி கதைகள் கேட்டுமே
பயமும் போகும் நெஞ்சிலே.

கரும்புபோலச் சின்னச்சின்னக்
கட்டுக் கதையும் சொல்லுவார்
விரும்பி நாமும் கேட்டுமே
வீரர் போலச் செல்லுவோம்.

# சின்னக் குழந்தை



சின்னச் சின்னக் குழந்தையிவள்
சிரிக்க வைக்கும் குழந்தையிவள்
மழலை பேசும் குழந்தையிவள்
மனதைக் கவரும் குழந்தையிவள்

கையை வீசி நடந்திடுவாள்
களங்க மில்லா குழந்தையிவள்
பையைத் தோளில் போட்டிடுவாள்
பள்ளிக் கூடம் சென்றிடுவாள்

ஓடி ஓடி வந்திடுவாள்
உடனொரு முத்தம் தந்திடுவாள்
பாட்டை விரும்பிப் பாடிடுவாள்
பார்க்கச் சொல்லி ஆடிடுவாள்.

# அம்மா சுட்ட அப்பம்



அப்பம் நல்ல அப்பம்
அம்மா சுட்ட அப்பம்
அருமையான அப்பம்
அதுவும் நல்ல பாலப்பம்

வட்ட மான அப்பம்
மாவில் சுட்ட அப்பம்
தட்டு நிறைய அம்மா
தந்து விட்டார் அப்பம்

சுட்ட அப்பம் மீதிலே
தூவி விட்டாள் சீனியுந்
பிச்சுப் பிச்சுத் தின்றுலே
பெரிதும் இனிக்கும் அப்பம்.

# பள்ளிக்குப் போவாய்...!



பள்ளிக்குப் போவாய் கண்ணுநீ
பத்திரமாகப் போய் வாடா

பாதையில் வண்டிகள் வேகமடா
பறந்து ஓடிப் போகுமடா

பார்த்து நீயும் விலகிநட
பாதை ஓரம் வலப்பக்கம்

சேர்ந்து மற்றப் பிள்ளைகளும்
செல்லாதிர் நடுப் பாதையிலே

பாதை குறுக்கே ஓடாதே
பராக்குப் பார்த்து நில்லாதே

விளையா டாதே தெருவினிலே
வேளைக்குப் பள்ளி போகண்ணு.

# எங்கள் பாடசாலை



பாலர் நாங்கள் படித்திடும்
பாட சாலை பாருங்கள்
பாடம் நாமும் படித்திட
பாட சாலை வாருங்கள்

பாலர் நாங்கள் கூடுவோம்
பரந்த வெளியில் ஆடுவோம்
பாலர் சுத்தம் பேணுவோம்
பலரும் புகழ வாழுவோம்

குப்பை கூளம் கூட்டியே
குறித்த குழியில் கொட்டுவோம்
எப்பொழுதும் சுத்தமாய்
இருக்க நாங்கள் பழகுவோம்.

# எங்கள் புத்தகம்




பாலர் நாங்கள் சேருவோம்
பாலர் பாட்டு வாங்குவோம்
பாடிப் பாடிப் பழகுவோம்
பாடி ஆடி மகிழுவோம்

சின்னச் சின்னப் புத்தகம்
சிறுவர்க் கேற்ற புத்தகம்
வண்ணப் படங்கள் கொண்டது
வாங்கிப் படித்து மகிழுவோம்

அன்பு அப்பா அம்மாவும்
அருமைத் தம்பி தங்கையும்
நன்கு கேட்டு மகிழ்ந்திட
நாங்கள் பாடிக் காட்டுவோம்.

# பந்து விளையாடுவோம்



பந்து அடிக்கப் பந்து அடிக்கப்
பாலர் நாங்கள் கூடுவோம்
வந்த பந்தை ஏந்தி ஏந்தி
வட்ட மாக ஓடுவோம்.

ஓங்கி ஓங்கிப் பந்து அடிப்போம்
ஒன்றாய்க் கூடி ஓடுவோம்
வாங்கி வாங்கி ஒருவர் ஒருவராக
மாறி மாறி அடிப்போம்

துள்ளித் துள்ளிப் பாயும் பந்தை
தொடர்ந்து தொடர்ந்து ஓடுவோம்
தள்ளித் தள்ளிப் பந்து அதனைத்
தரையில் உருட்டி ஆடுவோம்.

# காந்தித் தாத்தா



காந்தித் தாத்தா எங்கள் தாத்தா
கடவுளை ஒத்த கருணைத் தாத்தா
சாந்தி வழியில் நின்ற தாத்தா
சகல ருக்கும் நல்ல தாத்தா.

நீதி நிற்க நிறத்து வேசம்
நீங்க என்றும் உழைத்த தாத்தா
சாதிச் சண்டை ஒழித்து என்றும்
தருமம் காத்த சாந்தித் தாத்தா

அன்புத் தாத்தா அருமைத் தாத்தா
அவரின் வழியில் நடந்திடு வோம்
துன்ப மின்றி வாழ்ந் திடவே
அவரின் பாதம் துதித் திடுவோம்.

# மழையில் நனையாதே




பள்ளிக்குப் போக வெளிப்பட்டாய்
பாலா மழையும் பெய்யுதடா
குடையை விரித்துப் பிடிந்துக்கொள்
குளிரும் மழையில் நனையாதே

வெள்ளம் வழியில் நிற்குமடா
விளையா டாதே வெள்ளத்தில்
உள்ளங் காலில் நீர்ச்சிரங்கு
உண்டாகு மது பொல்லாதே

வழியில் வழுக்கல் மிகக்கவனம்
வழுக்கிக் கீழே வீழாதே
அழுக்காகும் உடை புத்தகமும்
அதையும் நீயே அறிவாயே.

# சுத்தம் செய்வோம்



பாலர் நாங்கள் படிக்கும் இந்தப்
பாடசாலே பாருமே
பாடசாலே சுத்தம் செய்யப்
பாலர் நாங்கள் சேருவோம்

சுற்றுப் புறமும் சூழலுமே
சுத்தமாக இருக்க நாம்
சுறு சுறுப்பாய்க் கூட்டியள்ளி
சுத்த மாக்க வாருமே

எங்கள் பள்ளி எங்கள் வீடு
என்றும் சுத்தம் பேணுவோம்
எல்லாம் சுத்த மாயிருந்தால்
என்றும் சுகமே காணுவோம்.

# குட்டிப் பென்சில்



எண்ணும் எழுத்தும் எழுதஎனே
எவரும் கையில் எடுத்திடுவார்
எண்ணிய கருமம் முடிந்தவுடன்
எழுதி நானும் தேய்ந்திருந்தால்,

நேர்மையாக வேலை செய்த
நிலையை அறிந்தும் என்தலையை
கூர்மையாகச் சீவி என்னைக்
குட்டிப் பென்சில் ஆக்கிடுவார்

குட்டிப் பென்சில் ஆனாலும்
குறையா வேலை செய்திடுவேன்
விட்டெறியும் வரையும் நான்
வேலை செய்யச் சலிப்படையேன்.

# பேனா



படிக்கும் பிள்ளைகள் கையிலும்
படித்த பெரியோர் கையிலும்
பிடிக்கும் பேனா பாரம்மா
பெரிது செயல்கள் செய்திடும்

சிறுவர் சிறுமியர் மகிழ்ந்திட
சிறிய கதைகள் நாடகம்
சின்னக் கவிதை என்பன
சிறப்பாய் எழுதும் பேனாவே

பெரியோர் விரும்பிப் படிக்கவே
பெரிய கதைகள் கடிதங்கள்
அரிய கவிதை நாவலும்
அழகாய் எழுதும் பேனாவே.

# பசு



பசுவே பசுவே ஓடிவா
பார்க்கும் தெய்வம் நீ அம்மா
கனிந்து மனமும் நீ இரங்கி
கறக்கப் பாலும் தருகின்றாய்



பச்சைப் புல்லும் தண்ணீரும்
பசியும் தீர நான் தருவேன்
அச்ச மின்றித் தின்னம்மா
அன்பாய்ப் பாலும் தருவாயே

# பூனை




புலியைப் போல உருவத்திலே
சிறிய நல்ல பூனையாரே
எலியைக் கண்டால் தின்பதற்கு
எட்டிப் பிடிக்கும் பூனையாரே

பட்டப் பகலில் மூலையிலே
படுத் துறங்கும் பூனையாரே
கட்டித் தயிரைச் சட்டியைவிட்டுக்
கொட்டிக் குடிக்கும் பூனையாரே

மியா மியா என்று கத்தி
மெல்லச் செல்லும் பூனையாரே
அயலில் உணவை இருட்டில் திருட
அசைந்து செல்லும் பூனையாரே

# பசுவும் கன்றும்




அம்மா என்று பசுவும் கன்றை
அழைக்கக் கத்துது
அந்தக் குரலும் கேட்டுக் கன்றும்
அங்கே வருகுது

அருகே வந்த கன்றைப் பசுவும்
அணைத்து நக்குது
ஆவலாகக் கன்றும் பாலை
முட்டிக் குடிக்குது

பாலைக் குடித்த கன்றுக்குட்டி
துள்ளி ஓடுது
பசுவும் கன்றைத் தொடர்ந்து தொடர்ந்து
பின்னே போகுது.

# முயல்




காட்டுக் குள்ளே முயல் ஒன்று
கண்டவுடனே ஓடுது பார்
மேடு பள்ளம் பாராமலே
வேகமாக ஓடுது பார்

புல்லும் தழையும் தின்னும் முயல்
பொந்துகளிலே வாழும் முயல்
பாய்ந்து பாய்ந்து ஓடும்முயல்
பற்றைக் குள்ளே பதுங்கும் முயல்

குட்டை வாலும் ஒன்றுண்டு
குறுகிய காலும் நாலுண்டு
நெட்டையான செவி இரண்டு
நிமிர்ந்து நிற்கும் தலை மேலே.

# ஆமை




ஆமை இது ஆமை
அசைந்து வருகுது ஆமை
தீமை இல்லாப் பிராணி
தெரிந்து கொள்வாய் தம்பி

நீரில் நிலத்தில் வசிக்குமிது
நீண்ட நாட்கள் உயிர்வாழும்
நிறைய மணலைத் தோண்டியதில்
நின்று முட்டை இட்டுவிடும்

மெல்லத் தலையை கால்நாலை
வேண்டிய வாறு உள்ளடக்கி
கல்லைப் போலக் கிடந்துவிடும்
காணும் அபாயம் உண்டானால்

ஓட்டை முதுகில் சுமக்குமது
ஒய்யாரமாக ஊர்ந்து வரும்
ஆமை சுமக்கும் ஓட்டினிலே
அழகாய்ச் சீப்பும் செய்வார்கள்.

# காலைப் பொழுதில்...!



காலை சூரியன் உதித்திடுவான்
கண்ணை விழித்து எழுந்திடுவோம்
வேலை செய்ய மக்களுமே
விரைந்து செல்வர் காலையிலே

கீ...கீ என்று பறவைகளும்
கிழக்கு வெளுக்க எழுந்திடும்
கா ..கா என்று காக்கைகளும்
கரைந்து எங்கும் பறந்திடும்.

கொக்கரக்கோ என்று தான்
கோழிச் சேவல் கூவிடும்
பக்கம் உள்ள புல்லிலே
பனித்துளிகள் மறைந்திடும்.

காலைக் கடனை முடித்து நாம்
கடவுளைப் பாடித் துதித்திடுவோம்
காலை உணவு உண்டபின்
கற்கப் பள்ளி சென்றிடுவோம்.

# பூக்கள்.






வானை நோக்கி மலர்ந்திடும்
வாச முள்ள பூக்களாம்
தேனை உண்ண வண்டுகள்
தேடி வரும் பூக்களாம்.

அரும்பாய் இருக்கப் பல்லைப்போல
அழகு காட்டும் மல்லிகை
விரும்பிப் பெண்கள் சூடிட
விரியும் நல்ல ரோசாவாம்

காலை சூரியன் வந்தவுடன்
கட்டு அவிழும் தாமரை
பாலைப் போல முல்லைப் பூ
பார்க்க அழகு வெள்ளைப் பூ

பட்டுப் போல பூக்களே
பார்க்க அழகு தந்திடும்
மொட்டு அவிழும் பூவைப்போல
முகம் மலர்ந்து இருப்போமே.

# வண்ணத்துப் பூச்சி



வண்ணத்துப் பூச்சிகளே
வடிவான பூச்சிகளே
எண்ணத்தைச் சொல்லுங்க
எங்கு நீங்கள் போகிறீங்க

பூக்களுமே இதழ் விரிக்க
போனவுடன் வாய் சிரிக்க
தாக்கமின்றித் தேன் இனிக்கத்
தான் குடித்துப் போகிறீங்க

தேன் குடித்து முடிந்தவுடன்
செட்டை ஆட்டிப் பறக்கிறீங்க
நன்னிறத்துப் பூக்களுக்கும்
நன்றிதான் சொன்னீங்களா?

# பறவைகள்



கூ..கூ... என்னும் ஒருபறவை குனிந்து
மு[illegible]வு என்னும் ஒருபறவை
கா... கா... என்னும் ஒருபறவை—இரவில்
கக்...கக்.. என்றும் ஒருபறவை

வண்ணப் பறவைகள் அநேகம்—எங்கும்
பறந்து திரியும் வானத்திலே
எண்ண முடியாப் பறவைகள்—பல
இருக்கு இந்த உலகத்திலே

குயிலும் காகம் கறுப்பு நிறம்—பறக்கும்
கொக்கு வெள்ளை நிறம்.
மயிலும் நீல வண்ணமது — காட்டில்
வளரும் கிளியும் பச்சை நிறம்

கோழி காகம் மீன்கொத்தி — வெள்ளைக்
கொக்கு புறுக்கள் மைனவும்
வளர்ந்த நாரை வாத்து அன்னம்—பல
வகையாய் உண்டு பறவைகளே.

# சேவல்



கொக்கரக்கோ கொக்கரக்கோ
கோழிச் சேவல் கூவுது
பக்கம் சிறகை அடித்து அடித்து
மேலே பார்த்துக் கூவுது.

வீட்டுக் கூரை மீது நின்று
வேக மாகக் கூவுது
பேட்டுக் கோழியோடு இரையைப்
பிரிய மாகப் பொறுக்குது

காலை நேரம் நாங்களெல்லாம்
கண் விழிக்கக் கூவுது
மாலை நேரம் கூரை ஏறி
மகிழ்ச்சி யாகத் தூங்குது.

# வண்ண மயில்



வண்ணமயில் இது பாருங்கள்
வானம் பார்த்து ஆடுது
கரிய வானைக் கண்டதும்
களிப் புடனே ஆடுது

தோகை விரித்து ஆடுது
தோழர் நாமும் பாடுவோம்
மேகம் மழையைப் பொழியட்டும்
மேலும் மயில் நின்றாடட்டும்.

# வண்டிகள்



1009(5)


எய்எய் மாட்டு வண்டி
எங்கே போகுது
ஏற்றி ஏற்றிப் பாரத்தை
இறக்கப் போகுது.

டிறிங் டிறிங் சயிக்கிள் வண்டி
எங்கே போகுது
ஏறி இறங்கிக் கருமம் எல்லாம்
பார்க்கப் போகுது

பூம்பூம் மோட்டார் வண்டி
எங்கே போகுது
போயும் போயும் பிரயாணத்தை
முடிக்கப் போகுது.

கூக்குகூக்கு ரயில் வண்டி
எங்கே போகுது
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்
கொண்டு போகுது.

# கப்பல்



கப்பல் போகுது கடல் மேலே – புகைக்
கப்பல் போகுது கடல் மேலே
எப்போதும் பொருள் ஏற்றியதும் - பின்பு
இறக்கப் போகுது கரைமேலே.

நீல வண்ணக் கடல் மேலே – கப்பல்
நீந்திப் போகுது அலை மேலே
ஓல மிட்டுக் கடல்மேலே - அது
ஓடிப் போகுது மலைபோல

பொங்கும் பால்போல் நுரைமேலே - பாய்ந்து
புகுந்து போகுது வழிமேலே
எங்கும் கடலைக் கடப்பதற்கு – நமக்கு
ஏற்ற சாதனம் கப்பல் அன்றோ.

# பம்பர் வருகுது.!




பம்பர் வந்து குண்டு போடுது
பலத்த சத்தமாய்
படுத்துக் கொள்வாய் நிலத்திலே நீ
பதுங்கிப் பக்கமாய்

பறந்து பறந்து குண்டுகளையே
பார்த்துப் போடுது
இறந்து இறந்து போனவர்கள்
எத்தனை பேரோ?

குண்டுகள் விழுந்த இடமும் பெரிய
குழிகள் ஆகுது
கண்டிருந்த மக்களுக் கெல்லாம்
கவனம் இல்லையே.

# மாமரம்



விட்டின் அருகில் மாமரம்
வெப்பம் தணிக்க நிழல்தரும்
கொத்துக் கொத்தாய்ப் பூக்குமது
குலை குலையாய்க் காய்க்குமது.

பச்சை நிறமாய்க் காயுண்டு
பழுத்தால் பழமும் மஞ்சள்நிறம்
அணிலும் கிளியும் அதில் உள்ள
அத்தனை காயையும் அரித்துவிடும்

அப்பா ஒட்டை வாளிகட்டி
அடித்து அடித்துக் கலைத்திடுவார்
நாளும் இதனைச் செய்திடுவார்
நாங்கள் பார்த்துச் சிரித்திடுவோம்.



## நான் ஓடும் மோட்டார்க்கார்


சின்னச் சின்ன மோட்டார்க்கார்
சிவந்த நல்ல மோட்டார்க்கார்
நான்கு சில்லு மோட்டார்க்கார்
நான் ஓடும் மோட்டார்க்கார்.

அப்பா வாங்கித் தந்தகார்
அழகான மோட்டார்க்கார்
பூம் பூம் மோட்டார்க்கார்
புகைவிடாத மோட்டார்க்கார்.

தம்பி தங்கை அனைவருமே
தாவி ஏறும் மோட்டார்க்கார்.
தள்ளி நின்றே பாருங்கள்
தரையி லோடும் மோட்டார்க்கார்

இறப்பர்ச் சில்லு மோட்டார்க்கார்
இங்கிலாந்தில் செய்த கார்
தம்பிப் பயணம் செய்யலாம்
நாலு பேர்வரை ஏறலாம்.

# உழவன்



மாடு இரண்டு ஏரு பூட்டி
வயலில் நன்கு உழுபவன்
நாடு பஞ்சம் தீரஎன்றே
நாளும் பாடு படுபவன்

நெல் விதைத்து களைபிடுங்கி
நீரி றைத்துக் காப்பவன்
நெல் விளைவு கண்டபின்னர்
நெஞ்சம் மகிழ்ந்து நிற்பவன்

மண்ணை உழுது பயிரைவளர்த்து
மணியை ஒன்று நூறாக்கி
உண்ண உணவு தந்துலக
உயிரைக் காப்பான் உழவனே.

# எங்கள் தோட்டம்



வெண்டி கத்தரி தக்காளி
வெள்ளரி பாகல் பூசினியும்
சுண்டை இலைக்கறி கீரைவகை
சொகுசாய் வளரும் தோட்டத்திலே

மிளகாய் போஞ்சி பயறுவகை
மேலே படரும் சுரைக்கொடியும்
அழகாய்ப் புடோலும் மரவள்ளி
அவரையும் உண்டெம் தோட்டத்திலே

வாழை மாவும் பலா நெல்லி
வளரும் தோடை எலுமிச்சை
மாதுளை கொய்யா நாரத்தை
வளரும் திராட்சை தோட்டத்திலே

மரக்கறி மேலாம் இலைக்கறியும்
மற்றும் உள்ள பருப்புவகை
தரக்குறைவில்லாப் பழவகையும்
தந்துதவும் எம் தோட்டம்.





பள பள என்று மின்னுது
படபட என்று இடிக்குது
சல சல என்று மழையும்
தரையின் மீது பெய்யுது

வெள்ளம் ஆறாய் ஓடுது
மேகம் இருண்டு தெரியுது
கொள்ளை கொள்ளை யாகவே
குமிழி நீரில் மிதக்குது

தழைக்கும் மரமும் செடிகொடிகள்
தணியும் சூரிய வெப்பமும்
மழையே உலகை வாழ்விக்கும்
மழையே இன்றி வாழ்வில்லை.


# நிலா



தோசை போல வானத்திலே
தோன்றும் வெண்ணிலா
ஆசையாயிருக் கதற்கு
அருகில் போகவே

அம்புலி மாமா என்று நாமும்
அழைத்துப் பார்ப்போமே
நம்பி மருமக்கள் என்று
நாடி வருவாரோ?

அம்மா காட்டிச் சோறு தந்த
அழகு வெண்ணிலா
சும்மா பரிசு கொடுக்க என்ன
சொல்லடா கண்ணு,




தேர்வருகுது தேர்வருகுது
கோயில் வீதியிலே
திரண் டடியார் வடம் பிடிப்பார்
சேர்ந்து வரிசையிலே

சின்னமலை நகர்வதுபோல்
தேரும் வருகுது
சிங்காரித்த தேரழகை
சேர்ந்து பாரம்மா

வாகைமாலை காற்றடிக்க
வளைந்து கொடுக்குது
போகப் போக மணியினோசை
கல கலக்குது.

வரும் சனங்கள் சமுத்திரமாய்
அங்கே தெரியுது
கருங்கடலில் கப்பல் போலத்
தேரும் வருகுது.

# வானொலி



எங்கள் வீட்டு வானொலி
இனிமை யாகப் பாட்டுக்களைத்
தங்கு தடை யின்றியே
தாளத் தோடு பாடுமே

நாட்டி லுள்ள செய்திகளை
நாங்கள் அறியச் சொல்லுமே
ஆட்டம் இல்லா நாடகம்
அருமை யாக ஆடுமே.

கதைகள் பலவும் கூறுமே
கச்சேரி கள் செய்யுமே
அதையும் கேட்டு நாங்களும்
ஆனந்த மாய் மகிழ்வோமே.

# உலகம்



பந்து போல உருண்டையாம்
பரந்த இந்த உலகமே
அந்தரத்தில் நிற்கு முலகம்
அங்கே உருண்டு போகுதாம்

பார்க்கத் தட்டை போலவே
பரந்த இந்த உலகத்தில்
சேர்ந்து கடலும் கிடந்துமே
திரையும் கரையில் மோதுது

இந்த உலகம் உருள்வதால்
இரவு பகல் ஆகுதாம்
சொந்த ஒளிச் சூரியனைச்
சுற்றி வலம் வருகுதாம்.



# பூனையும் எலியும்

தொலைவில் கண்ட எலியைப் - பூனை
துரத்திப் போகுது
வளையில் எலியும் போன - பின்பு
வாயைப் பிளக்குது

மியா மியா என்று பூனை - தன்
வீடு போகுது
பயமும் இல்லை என்று - எலியும்
பதுங்கிக் கிடக்குது

அயலில் வந்த பாம்பும் - ஒன்று
வளை யில் நுழையுது
செயல் இழந்து கண்ட - எலியும்
திகைத்துப் போகுது

எட்டிப் பிடித்த எலியும் - பாம்பக்
கிரையாய்ப் போகுது
இட்ட விதியை யாரே அழிப்பார்
என்று நோகவே.

# பசுவும் புலியும்



வட்டமாகக் கைகோர்த்து வேலி அமைப்போமே
வட்டத்துக்குள் பசுவைவிட்டுப் பாதுகாப்போமே

பசுவைக்கண்ட புலியுடனே பாய்ந்து வருகுது
பக்குவமாய்ப் புலியை உள்ளேவிடாது காப்போமே

புலியும் வந்து வேலிதனை வலிமைபார்க்குமே
வலிமையான சங்கு இரும்பு வேலிஎன்போமே


புலியும் வேலி தனையுடைத்து உள்ளேபோனாலே
கிலிகொளாது பசுவைநாம் வெளியே விடுவோமே

மாறி மாறி பசுபுலியை வெளியே உள்ளேயும்
விட்டுவிட்டு வேலியதன் வலிய பெயரையே

கூறிக் கூறி ஆனந்தமாய் பாலர் நாங்களே
கூடிக் கூடிப் பசுவும் புலியும் ஆடி மகிழ்வோமே



# குரங்காட்டி



குட்டிக் குரங்கது பார்தம்பி
கொண்டு வந்தான் குரங்காட்டி
எட்டிப் பாயுது அவன்மேலே
இருக்குது அவனில் தோள்மேலே,

போடுது கரணம் தலைகீழே
போயும் படுக்குது நிலம்மேலே
ஆடுது காவடி அழகாக
அசைந்து அசைந்து மெதுவாக

நடந்து வருகுது தள்ளாடி
நடனம் ஆடுது சுழன்றுடி
கண்டவர் ஆட்டம் மகிழ்ச்சிபெற
காசுகள் கொடுத்தனர் கைநிறைய,

# பண்புடன் வாழப் பழகிடுக!





நல்ல பாதையில் நடைபோடு
நல்லவன் என்னும் பெயர் தேடு
எல்லோர் மனமும் மகிழ்ந்திடவே
இதயம் கனிந்து உறவாடு.

பள்ளிக் கூடம் சென்றிடு
படிப்பினில் ஆர்வம் கொண்டிடு
கல்வியின் சிறப்பை உணர்ந்திடு
கற்றோரை என்றும் மதித்திடு.

நீதிக் கதைகள் கற்றிடு
நெறி பிறழாமல் வாழ்ந்திடு
பாலர் நூல்கள் படித்திடு
பண்புடன் வாழப் பழகிடு.